## புனித இரவின் பாஸ்கா திருவிழிப்பு திருப்பலி

(ஆதி 1:1–2:2; 14:15–15:1; எசேக்கியேல் 36:16–28; ரோமர் 6:3–11; மத்தேயு 28:1–10)

முன்னுரை. 1

**இருளிலிருந்து கலிலேயா வரை"**

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே

ஒரு மனிதன், தன் சிறுவயதில் வளர்ந்த கிராமத்திற்குத் திரும்பி வந்தான். வாழ்க்கை அவன் எதிர்பார்த்தபடி செல்லவில்லை அவனது கனவுகள் சிதறியிருந்தன, உறவுகள் உடைந்திருந்தன, நம்பிக்கை மங்கியிருந்தது. ஒரு மாலை, அவன் சிறுவயதில் தன் தந்தையுடன் மீன் பிடிக்கக் கற்றுக் கொண்ட சிறிய ஏரிக்கரைக்குச் சென்றான். அங்கே தண்ணீரில் மறையும் சூரியன் பிரதிபலித்தது. கரையின் நாணல்கள் பழையபடி அசைந்தன. அப்போது அவன் தந்தையின் வார்த்தைகள் நினைவுக்கு வந்தது:

மீண்டும் தொடங்க அஞ்சாதே."

வெளிப்புறத்தில் எதுவும் மாறவில்லை. அவனுடைய கடன்கள் இருந்தபடியே இருந்தன. கடந்த காலம் அழிக்கப்படவில்லை. ஆனால் அவன் உள்ளத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. நம்பிக்கை மீண்டும் உயிர்த்தது. சில சமயங்களில் முன்னேற, நாம் ஆரம்பித்த இடத்திற்கே திரும்ப வேண்டும்.

பல ஆண்டுகள் கழித்து, ஒரு சிறிய கடற்கரை நகரத்தை கடும் புயல் தாக்கியது. மின்சாரம் துண்டிக்கப்பட்டது. மரங்கள் வேரோடு விழுந்தன. எங்கும் இருள் சூழ்ந்தது. ஒரு வீட்டில், ஒரு பாட்டி ஒரு சிறிய மெழுகுவர்த்தியை ஏற்றி ஜன்னலில்

வைத்தாள். அதை பார்த்த அண்டை வீட்டார் அவர்களும் மெழுகுவர்த்தி ஏற்றினர். இப்படியே ஒவ்வொரு வீட்டிலும் ஒளி ஒளிரத் தொடங்கியது. புயல் இன்னும் கொந்தளித்தாலும், அந்த இருள் இனி முழுமையானதாக தோன்றவில்லை. ஒரு சிறிய ஒளி பலருக்கு தைரியம் அளித்தது.

இன்றிரவு, நாமும் இருளில் இருந்து ஆரம்பித்தோம். உயிர்ப்பின் நெருப்பை ஏற்றினோம். அதன் பிறகு பாஸ்கா மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டது. அதிலிருந்து நமது மெழுகுவர்த்திகளும் ஏற்றப்பட்டன. ஒளி மெதுவாகப் பரவி, ஆலயத்தின் அழகையும், கிறிஸ்துவினால் வரும் நம்பிக்கையையும் வெளிப்படுத்தியது. ஏரிக்கரையில் நின்ற அந்த மனிதனைப் போலவும், மெழுகுவர்த்தி ஏற்றிய அந்த பாட்டியைப் போலவும், நாம் நினைவுகூருகிறோம் உயிர்ப்பு என்பது கடந்த காலத்தைப் பற்றியது மட்டும் அல்ல; அது இன்றைய நாளையும் பற்றியது. உயிரோடு இருக்கும் கிறிஸ்து நம்மை நமது பயங்களிலும், துயரங்களிலும், அன்றாட வாழ்க்கையின் சாதாரண தருணங்களிலும் சந்திக்கிறார்.

கல்லறையில் வானதூதர் பெண்களிடம் சொல்கிறார்:

“அவர் இங்கே இல்லை; அவர் உயிர்த்தெழுந்தார். கலிலேயாவுக்கு செல்லுங்கள்; அங்கே அவரைக் காண்பீர்கள்.”

கலிலேயா என்பது அவர்களின் வாழ்க்கை தொடங்கிய இடம் அன்பு முதலில் மலர்ந்த இடம், விசுவாசம் உயிரோடு இருந்த இடம். இன்றிரவு, நாமும் நமது தொடக்கத்திற்குத் திரும்ப அழைக்கப்படுகிறோம். அதற்கும் மேலாக,

உலகுக்கே “கலிலேயா” ஆக அழைக்கப்படுகிறோம்

கிறிஸ்துவின் ஒளியை நம்மூலம் பிரகாசிக்கச் செய்து, பிறரை இருளிலிருந்து நம்பிக்கைக்குள் நடத்துவதற்காக

நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட உறுதி ஏற்போம்.

**“முன்னுரை“ (2)**

**கலிலேயாவுக்கு திரும்புதல்”**

ஒரு மனிதன், தன் சிறுவயதில் வளர்ந்த கிராமத்திற்குத் திரும்பி வந்தான்.

அந்த இடம் மகிழ்ச்சியான நினைவுகளும், வலிநிறைந்த அனுபவங்களும் கலந்ததாக இருந்தது. வாழ்க்கை அவன் நினைத்தபடி செல்லவில்லை

கனவுகள் சிதறின, உறவுகள் முறிந்தன, நம்பிக்கைகள் உடைந்தன.

ஒரு மாலை, அவன் சிறுவயதில் மீன் பிடிக்கக் கற்றுக்கொண்ட பழைய ஏரிக்கரைக்குச் சென்றான். அங்கே தண்ணீரில் மறையும் வானம் பிரதிபலித்தது. நாணல்கள் எப்போதும் போல அசைந்தன. அப்போது திடீரென அவன் தந்தையின் குரல் நினைவுக்கு வந்தது:

“ மீண்டும் தொடங்க அஞ்சாதே.”

வெளி உலகில் எதுவும் மாறவில்லை. ஆனால் அவன் உள்ளத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. நம்பிக்கை மீண்டும் பிறந்தது. சில சமயங்களில் முன்னேற, நாம் ஆரம்பித்த இடத்திற்கே திரும்ப வேண்டும் என்பதை அவன் உணர்ந்தான்.

இன்றிரவு, வான தாதர் பெண்களை அவர்களுடைய “கலிலேயா”விற்கு திரும்ப அனுப்புகிறார். அது வரைபடத்தில் இருக்கும் ஒரு இடம் மட்டும் அல்ல; அது வாழ்க்கையின் தொடக்க இடம், விசுவாசத்தின் ஆரம்பம், முதல் அன்பு மலர்ந்த தருணம்.

“கலிலேயாவுக்கு செல்லுங்கள்; அங்கே அவரைக் காண்பீர்கள்.”

இயேசுவின் உயிர்ப்பு என்பது வெறும் காலியான கல்லறையைப் பார்ப்பது மட்டுமல்ல; அது நம் இதயத்தில் வாழ்க்கை முதன்முதலில் உயிர்த்தெழுந்த அந்த தருணங்களிலும், இடங்களிலும் உயிரோடு இருக்கும் கிறிஸ்துவை மீண்டும் நமது இதயங்களில் கொண்டு

வர வேண்டி முயற்சி செய்வோம்.

**“முன்னுரை. “(3)**

**புயலின் நடுவே ஒரு  மெழுகுவர்த்தி”**

பல ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு சிறிய கடற்கரை நகரத்தை கடும் புயல் தாக்கியது. மின்சாரம் துண்டிக்கப்பட்டது. மரங்கள் வேரோடு பிடுங்கி விழுந்தன. முழு நகரமும் இருளில் மூழ்கியது.

ஒரு வீட்டில், ஒரு பாட்டி ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றி ஜன்னலில் வைத்தாள். அதை பார்த்த அண்டை வீட்டார் ஒவ்வொருவரும் ஒரு மெழுகுவர்த்தி ஏற்றினர். இப்படியே ஒவ்வொரு வீட்டிலும் ஒளி ஒளிரத் தொடங்கியது. புயல் இன்னும் கொந்தளித்தாலும், அந்த இருள் இனி முழுமையாகத் தோன்றவில்லை. ஒரு சிறிய ஒளி பலருக்கு தைரியம் அளித்தது.

இன்றிரவு, நாமும் இருளில் இருந்து ஆரம்பித்தோம். உயிர்ப்பின் நெருப்பை ஏற்றினோம். பாஸ்கா மெழுகுவர்த்தி இருளை கிழித்தது. அந்த ஒளி ஒரு மெழுகுவர்த்தியிலிருந்து மற்றொன்றிற்கு பரவியது.

அந்த ஒளியே கிறிஸ்து வரலாற்றில் மட்டும் அல்ல, நம் இதயங்களில், நம் வீடுகளில், நம்மைச் சுற்றியுள்ள உலகிலும் ஒளிர்கிறார்.

கல்லறைக்கு வந்த பெண்கள் துயரத்திலிருந்து ஆச்சரியத்திற்குச் சென்றது போல, நாமும் இந்த ஒளி நம் வாழ்க்கையை மாற்ற அனுமதிக்க அழைக்கப்படுகிறோம்.

உயிர்த்தெழுந்த ஆண்டவர் நமக்கு முன்பாகச் சென்று,

நிராசையிலிருந்து நம்பிக்கைக்கு,

இறப்பிலிருந்து வாழ்விற்கு,

கல்லறையிலிருந்து கலிலேயாவிற்கு

நம்மை வழிநடத்துகிறார்.

**மறையுறை”**

**“கலிலேயாவுக்கு செல்லுங்கள்”**

(மத் 28:1–10)

அன்பான சகோதர சகோதரிகளே,

ஒரு மனிதன், பல ஆண்டுகளுக்குப் பிறகு தன் சிறுவயது கிராமத்திற்குத் திரும்பி வந்தான். அவன் வாழ்க்கை முற்றிலும் சிதறியிருந்தது வியாபாரம் தோல்வியடைந்தது, உறவுகள் உடைந்தன, ஆழ்ந்த ஏமாற்றம் அவனை சூழ்ந்தது.

அவன் கைகால் கட்டிய அனைத்தும் தூளாகி விட்டது போல அவனுக்கு தோன்றியது.

ஒரு மாலை, ஏன் என்று கூட தெரியாமல், அவன் சிறுவயதில் தன் தந்தையுடன் மீன் பிடிக்கக் கற்றுக்கொண்ட அந்த சிறிய ஏரிக்கரைக்குச் சென்றான்.

அந்த இடம் அதிகம் மாறவில்லை. தண்ணீரில் இன்னும் மாலை சூரியன் பிரதிபலித்தது. காற்றில் நாணல்கள் அசைந்தன. அப்போது திடீரென அவன் தந்தையின் குரல் நினைவுக்கு வந்தது

“மீண்டும் முயற்சி செய்ய அஞ்சாதே.”

அந்த தருணத்தில் வெளியில் எதுவும் மாறவில்லை. அவன் கடன்கள் மறைந்துவிடவில்லை. கடந்த காலம் திரும்ப கிடைக்கவில்லை ஆனால் அவன் உள்ளத்தில் ஏதோ ஒரு மாற்றம் ஏற்பட்டது. நம்பிக்கை மீண்டும் உயிர்த்தது. பின்னர் அவன் சொன்னான்

“அங்கே நான் திரும்பிச் சென்றதே என் வாழ்க்கையை காப்பாற்றியது.”

இன்றிரவு, வானதூதர் பெண்களை கலிலேயாவுக்கு அனுப்புகிறார் புவியியல் ரீதியாக மட்டுமல்ல, ஆன்மீக ரீதியாகவும் அவர்களின் தொடக்கத்திற்கே.

அதாவது

“கலிலேயாவுக்கு செல்லுங்கள்; அங்கே அவரைக் காண்பீர்கள்.”

இந்த எளிய வார்த்தைகளில் உயிர்ப்பின் முழு இரகசியமும் மறைந்துள்ளது. உயிர்த்தெழுதல் என்பது இயேசுவுக்கு என்ன நடந்தது என்பதை மட்டும் குறிக்கவில்லை; நாம் அவரை உயிரோடு

மீண்டும் சந்திக்க வேண்டிய இடம் எது என்பதைப் பற்றியது.

கல்லறைக்கு செல்லும் பாதை

இரண்டு பெண்கள் இருவரின் பெயரும் மரியா இருவரும் ஒரு கல்லறைக்குச் செல்கிறார்கள்.

அவர்கள் வாசனைப்பொருட்களை எடுத்துச் செல்கிறார்கள்.

அவர்கள் துயரத்தை எடுத்துச் செல்கிறார்கள்.

அவர்கள் உடைந்த நம்பிக்கைகளையும் எடுத்துச் செல்கிறார்கள்.

அவர்கள் கடைசியாக பார்த்தது—ஒரு கல்லால் மூடப்பட்ட கல்லறை.

அவர்கள் மனித வரலாற்றில் மிகவும் பரிச்சயமான பாதையில் நடக்கிறார்கள்:

கல்லறைக்கு செல்லும் பாதை.

அந்த பாதையை நாமும் அறிவோம்.

ஒரு சவப்பெட்டிக்கருகில் நின்றபோது அந்த பாதையில் நடக்கிறோம்.

ஒரு உறவு முடிவுக்கு வந்தால் அந்த பாதையில் நடக்கிறோம்.

ஒரு நோயறிதல் நம் வாழ்க்கையை மாற்றும் போது அந்த பாதையில் நடக்கிறோம்.

நம்பிக்கை துரோகம் செய்யப்படும் போது அந்த பாதையில் நடக்கிறோம்.

நம்பிக்கை சிதறும் போது அந்த பாதையில் நடக்கிறோம்.

நம் செய்திகளில் வன்முறை, கொடுமை, அநீதி நிரம்பியதைப் பார்த்து, நல்லது வாழ முடியுமா

என்று சந்தேகிக்கும் போது அந்த பாதையில் நடக்கிறோம்.

ஆழ்ந்த அர்த்தத்தில், நம் உலகத்தில் வாழ்க்கையே ஒரு நீண்ட கல்லறை நோக்கிச் செல்லும் பாதையாகத் தோன்றலாம்—ஒருநாள் மற்றவர்கள் நம்மையும் அந்த இறுதி பயணத்தில் அழைத்துச் செல்வார்கள்

இந்த பெண்கள் உயிர்த்தெழுதலை எதிர்பார்க்கவில்லை. அவர்கள் அழுகையை எதிர்பார்த்தார்கள். மரணம் தொடங்கியதை முடிக்கவே அவர்கள் செல்கிறார்கள்.

அப்போது—வானம் பிளக்கிறது

ஒரு வானதூதர் அதிசயமான வார்த்தையைச் சொல்கிறார்

“நீங்கள் தவறான இடத்தில் இருக்கிறீர்கள். அவர் இங்கே இல்லை; அவர் உயிர்த்தெழுந்தார்.”

அந்த அதிர்ச்சியை சிந்தித்துப் பாருங்கள். அந்த குழப்பத்தை நினைத்துப் பாருங்கள். மரணம் இருக்க வேண்டிய இடம் காலியாக உள்ளது.

நீங்கள் இறந்தவர்களிடையே இயேசுவைத் தேடினால், நீங்கள் தவறான இடத்தில் தேடுகிறீர்கள்.

உயிர்த்தெழுதல் என்பது வருத்தம், கசப்பு, நிராசை போன்ற “கல்லறைகளில்” கிடைக்காது. உயிரோடு இருக்கும் கிறிஸ்து, நம்பிக்கை அடைக்கப்பட்ட இடங்களில் இருப்பதில்லை. அவர் எப்போதும் நம்மை விட முன்னே செல்கிறார்; எப்போதும் அமைதியாக இருக்கிறார்; முடிந்தது போலத் தோன்றும் இடங்களிலிருந்து கூட புதிய வாழ்வை உருவாக்குகிறார்.

கலிலேயா?”ஏன் செல்ல வேண்டும் ?

ஒரு ஆச்சரியமான கட்டளை வருகிறது

“கலிலேயாவுக்கு செல்லுங்கள்.”

ஏன் கலிலேயா?செல்ல வேண்டும்

ஏனெனில், அனைத்தும் தொடங்கிய இடம் கலிலேயாதான்.

அது அழைப்பு வந்த இடம்:

“என்னைப் பின்தொடருங்கள்.”

அது முதல் அன்பு மலர்ந்த இடம்.

அது வலைகள் நிரம்பி கிழியும் அளவுக்கு ஆசீர்வாதம் கிடைத்த இடம்.

அது தண்ணீர் திராட்சரசமாக மாறிய இடம்.

அது ஐந்து அப்பங்கள் ஆயிரக்கனக்கானவர்களை பசியாற்றிய இடம்.

அது குஷ்டரோகிகள் சுகமடைந்த இடம்.

அது நடக்க முடியாதவர் நடந்த இடம்.

அது நயீன் விதவை தனது மகனை மீண்டும் உயிருடன் பெற்ற இடம்.

அது பாவிகள் கண்ணீர் சிந்தி இரக்கத்தை கண்ட இடம்.

அது மலைப் பிரசங்கத்தினால்  தீப்பற்றிய இடம்.

அது மீனவர்கள் திருத்தூதர்களாக மாறிய இடம்.

கலிலேயா ஒரு சாதாரண இடம்—சில சமயங்களில் குழப்பமானது, கிராமப்புறம், பிறஜாதியினரும் வெளிநாட்டினரும் கலந்த இடம். அது எருசலேம் அல்ல; அதிகாரத்தின் மையம் அல்ல. ஆனால் அதுவே இறைவனின் வெளிப்பாடு நிகழ்ந்த இடமாக மாறியது.

கலிலேயாவில் விசுவாசம் உயிரோடு இருந்தது.

ஆனால் பின்னர் புனித வெள்ளி வந்தது.

சுகப்படுத்தியவர் சக்தியற்றவராக சிலுவையில் தொங்குகிறார்.

அதிகாரத்தோடு பேசியவர் மௌனமாகிறார்.

பிறரை இரட்சித்தவர் தம்மையே இரட்சிக்கவில்லை.

இறந்தவர்களை எழுப்பியவர் கல்லறையில் வைக்கப்படுகிறார்.

அப்போது, கலிலேயா ஒரு அழகான மாயை போலத் தோன்றியது—சிலுவையில் உடைந்து போன ஒரு குமிழி போல.

நம்முடைய வாழ்க்கையிலும் இப்படிப்பட்ட தருணங்கள் இல்லையா?

ஒரு காலத்தில் விசுவாசம் பிரகாசமாக இருந்தது—ஆனால் துன்பத்தால் சிதறியது.

ஒரு காலத்தில் ஜெபம் உயிரோடு இருந்தது—இப்போது வெறுமையாகத் தோன்றுகிறது.

“இது எல்லாம் உண்மையா? அல்லது வெறும் உணர்ச்சியா?” என்று நாம் சந்தேகித்த தருணங்கள் இருக்கின்றன.

இதற்கான தேவனுடைய பதில்தான் உயிர்ப்பு

உயிர்த்தெழுதல் என்பது, கலிலேயாவில் நடந்த அனைத்திற்கும் பிதாவான தேவன் தம் அதிகாரப்பூர்வ முத்திரையை இடுவது போலாகும்.

எதுவும் மாயை அல்ல.

எதுவும் வீணாகவில்லை.

ஒரு கண்ணீரும் கவனிக்கப்படாமல் போகவில்லை.

ஒரு அன்பின் செயலும்கூட அர்த்தமில்லாததல்ல.

ஒரு ஜெபமும் கேட்கப்படாமல் போகவில்லை.

அன்பு தோற்கவில்லை.

சிலுவையில் அறையப்பட்டவர் உயிரோடு இருக்கிறார்.

உங்களின் கலிலேயா எங்கே?”

அதனால், இன்றிரவு தேவதூதர் சொல்கிறார்:

நீங்கள் கல்லறை நோக்கி நடந்து கொண்டிருக்கிறீர்கள் என்றால்—திரும்பிப் போங்கள்.

கலிலேயாவுக்கு செல்லுங்கள்.

ஆனால், உங்கள் கலிலேயா எங்கே?

ஒரு தருணத்தில், திருவிவிலியம் நேரடியாக உங்கள் வாழ்க்கையோடு பேசியதுண்டா?

ஒரு அறிக்கை (பாவமன்னிப்பு) உங்கள் உள்ளத்தின் பாரத்தை அகற்றியதுண்டா?

ஒரு திருப்பலியில், நீங்கள் தனியாக இல்லை என்று உணர்ந்ததுண்டா?

ஒரு இருள் நிறைந்த நேரத்தில், விளக்கமில்லாத சமாதானம் உங்கள் இதயத்தை நிரப்பியதுண்டா?

ஒரு நட்பின் மூலம், கிறிஸ்துவின் அன்பை நீங்கள் அனுபவித்ததுண்டா?

ஒரு சிறிய இரக்கச் செயல், இன்னும் உலகில் உயிரோடு இருக்கிறது என்று நினைவூட்டியதுண்டா?

அந்த தருணங்களே உங்கள் கலிலேயா.

சிலருக்கு, கலிலேயா என்பது சிறுவயது விசுவாசம்.

சிலருக்கு, அது ஒரு ஆன்மிக முகாம் (retreat).

சிலருக்கு, அது ஒரு குழந்தையின் பிறப்பு.

சிலருக்கு, அது ஒரு மருத்துவமனை அறை—அங்கு பயத்தை விட இரக்கம் அதிகமாக இருந்தது.

இன்றிரவு நீங்கள்,

“எனக்கு இப்படியான கலிலேயா எதுவும் இல்லை” என்று நினைத்தால்

மற்றவரின் கலிலேயாவை எடுத்துக்கொள்ளுங்கள்.

உயிரோடு இருக்கும் விசுவாசம் கொண்ட ஒருவரிடம் செல்லுங்கள்.

ஒரு புனிதரின் சாட்சியத்தை கேளுங்கள்.

துன்பத்திலும் நம்பிக்கையை இழக்காத ஒருவரின் கதையை வாசியுங்கள்.

திருச்சபை தானே ஒரு பெரிய கலிலேயா—தலைமுறை தலைமுறையாக மக்கள் உயிரோடு இருக்கும் கிறிஸ்துவை சந்தித்த இடம் கலிலேயா.

எம்மாவுசுக்கு சென்ற சீடர்களைப் பற்றி நினைத்துப் பாருங்கள். அவர்கள் கால்கள் எருசலேமிலிருந்து விலகிச் சென்றாலும், அவர்களின் இதயம் கலிலேயாவை நினைத்துக் கொண்டிருந்தது—அவர்கள் பார்த்ததும், கேட்டதுமாகிய அனுபவங்களை நினைத்துக் கொண்டிருந்தது.

அவர்கள் அவரைப் பற்றி பேசிக்கொண்டிருக்கும்போது, அவர் வந்து அவர்களோடு நடக்கத் தொடங்கினார்.

அவர்களின் இதயம் தீப்பற்றியது.

உயிர்த்தெழுந்த ஆண்டவர் எப்போதும் கலிலேயாவில் தான் காணப்படுகிறார்—

நீங்கள் முதலில் அவரது அன்பை அறிந்த அந்த இடம் கலிலேயாதான்.

நாமே கலிலேயாவாக மாற வேண்டும்

ஆனால், உயிர்ப்பு என்பது கலிலேயாவைக் கண்டுபிடிப்பதிலேயே முடிவடைவதில்லை.

அது நம்மை கலிலேயாவாக மாற அழைக்கிறது.

இரண்டாம் உலகப்போரின் போது, ஒரு ஆலயத்தில் இருந்த கிறிஸ்துவின் சிலை ஒரு குண்டுவெடிப்பால் சேதமடைந்தது. ஆனால் அதன் உடல் பாகங்கள் மட்டும் மீதமிருந்தது; கைகள் உடைந்து போயிருந்தன. பின்னர் அந்த ஆலயம் மீண்டும் கட்டப்பட்டபோது, அந்த சிலையை கைகளின்றி அப்படியே வைத்தார்கள். அதன் கீழ் ஒரு வாசகம் எழுதப்பட்டது:

“கிறிஸ்துவுக்கு உங்கள் கைகளே தவிர வேறு கைகள் இல்லை.”

இன்றிரவு, உயிர்த்தெழுந்த ஆண்டவர் நம்மை அனுப்புகிறார்—

நினைவுகளில் மட்டும் தங்கி இருக்க அல்ல,

உலகத்திற்கே கலிலேயாவாக மாறுவதற்காக.

அந்த இடங்களாக நாம் மாற வேண்டும்,

அங்கு:

அப்பம் பெருகுகிறது.

காலியான வலைகள் மீண்டும் நிரம்புகின்றன.

தண்ணீர் திராட்சரசமாக மாறுகிறது.

பாவிகள் இரக்கத்தை கண்டடைகிறார்கள்.

துயரப்படுகிறவர்கள் ஆறுதல் பெறுகிறார்கள்.

மறக்கப்பட்டவர்கள் கவனிக்கப்படுகிறார்கள்.

நம்பிக்கை அமைதியாக இருந்தாலும் உறுதியாக மீண்டும் எழுகிறது.

உயிர்த்தெழுதல் எப்போதும் இடியுடன் வராது.

அது சிறிய விசுவாச செயல்களில் தொடங்குகிறது:

ஒரு மன்னிப்பு வார்த்தையில்,

ஒரு தாராள செயலில்,

கைவிடாமல் நிற்கும் மனப்பான்மையில்,

மீண்டும் நம்ப முடிவு செய்வதில்,

பின்வாங்காமல் உதவும் கையை நீட்டுவதில்.

நாம் அன்பில் செயல்படும் ஒவ்வொரு தருணத்திலும், கலிலேயா மீண்டும் நிகழ்கிறது.

நாம் கசப்பை விட இரக்கத்தைத் தேர்ந்தெடுக்கும் ஒவ்வொரு தருணத்திலும், கல் உருண்டு விலகுகிறது.

நாம் நிந்தனைக்கு பதிலாக நம்பிக்கையைத் தேர்ந்தெடுக்கும் ஒவ்வொரு தருணத்திலும், கல்லறை காலியாகிறது.

முடிவு

அன்பானவர்களே,

இன்றிரவு நாம் கேட்கிறோம்

“கலிலேயாவுக்கு செல்லுங்கள்.”

ஆனால் அதைவிட ஆழமான அழைப்பு இதுதான்

“கலிலேயாவாக மாறுங்கள்.”

உயிர்த்தெழுந்த ஆண்டவர் நமக்கு முன்பாகச் செல்கிறார்.

அவர் நமக்காக கல்லறைகளில் அல்ல, வாழ்வின் இடங்களில் காத்திருக்கிறார்.

ஆகையால்,

நிராசையிலிருந்து நம்பிக்கைக்குச் செல்லுங்கள்.

இறப்பிலிருந்து வாழ்விற்குச் செல்லுங்கள்.

இருளிலிருந்து ஒளிக்குச் செல்லுங்கள்.

நாம் சென்ற இடமெல்லாம்,

கிறிஸ்துவின் ஒளி ஒளிரட்டும்.

நம்மூலம் உலகம் புதிய கலிலேயாவை அனுபவிக்கட்டும்.

இறுதி அழைப்பு

கல்லறை நோக்கிச் செல்லும் பாதையில் தொடர்ந்து நடக்காதீர்கள்.

ஏமாற்றத்திலே உங்கள் வாழ்க்கையை அமைக்காதீர்கள்.

திரும்பிப் போங்கள்.

கிறிஸ்து முதலில் உங்களைச் சந்தித்த இடத்திற்குத் திரும்புங்கள்.

உங்கள் இதயத்தில் அன்பு முதன்முதலில் விழித்தெழுந்த அந்த தருணத்திற்குத் திரும்புங்கள்.

கலிலேயாவுக்கு திரும்புங்கள்.

அங்கிருந்து, மற்றவர்களுக்காக நீங்கள் கலிலேயாவை உருவாக்குங்கள்.

ஏனெனில் தேவதூதரின் வாக்குறுதி இன்னும் உண்மையாகவே இருக்கிறது

“அங்கே அவரைக் காண்பீர்கள்.”

ஒருமுறை நீங்கள் உயிரோடு இருக்கும் அவரைக் கண்டுவிட்டால்,

கல்லறையே இறுதி என்று இனி ஒருபோதும் நினைக்கமாட்டீர்கள்.

ஆமென்.

Prepared by: **Fr. Paul Julian,** Perth ,Australia

and Translated by: **Leonard Arulandhu,** Holy Family Church, Chennai